நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 நாகப்பட்டினம்

வழக்கு எண்: CC 588/2021

வழக்கு சாட்சி : எ.த.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜெயசேதுராமன் | தொழில் | : |
| தந்தை பெயர் | : வெங்கடாசலம் | | : |
| கிராமம் | : வடக்கு பொய்கைநல்லூர் | வயது | : 43 / 2026 |
| தாலுக்கா | : | | |

Solemnly affirmed in accordance with the provision of Oaths Act, 1969 (Act 44 of 1969), of the day of **23.06.2026**

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் நாகப்பட்டினம் தாலுக்கா, வடக்குபொய்கைநல்லூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் MBA படித்துள்ளேன். நான் இவ்வழக்கில் முதல் எதிரி ஆவேன். எதிரி 2, 3 எனது அண்ணன், அண்ணி ஆவார். நான் 2015 ஆம் ஆண்டு முதல் Prompt Multi state Prompt coperative house building society limited மேலாளராக வேலை செய்து வந்தேன். மத்திய மாநில அரசின், Ministry of agricultural and coperation துறையால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஆகும். சென்னையில் தலைமை அலுவலகம் 2012 ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் நிர்வாக அலுவலங்கள் கோயம்புத்தூர், ஆர்எஸ் புரம், டிபி ரோடில் இயங்கி வந்தது. கடந்த 05.10.2015 ம் தேதி தினமலர் நாளிதழில் வந்த Prompt Multi state Prompt coperative house building society limited கம்பெனியின் விளம்பரத்தை பார்த்து நேர்காணலுக்கு சென்றேன். பின்பு 20.10.2015 ல் வேலைக்கு சேர்ந்தேன். நிதி நிறுவனம் என்பதால் என்னிடம் caution deposit ஆக 3 லட்சம் ரூபாய் கேட்டார்கள். 3 லட்சத்தை நான் நாகப்பட்டினம் கரூர் வைசியா வங்கிக் கணக்கில் செலுத்தி கோயம்புத்தூரில் உள்ள நிதி நிறுவனத்திற்கு டெபாசிட் செய்தேன். நான் தொகை செலுத்தியது சம்பந்தமான **வங்கி ரசீது எதசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னை போல் 8 பேர் 15.10.2015 அன்று இன்டர்வுயூ செய்யயப்பட்டார்கள். 8 நபர்களில் 6 நபர்களை நாகப்பட்டினத்தில் உள்ள Prompt Multi state Prompt coperative house building society limited க்கு caution deposit செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டோம். என்னுடன் நாகப்பட்டினம் கிளையில் வேலை செய்த ராஜா,

ராஜலட்சுமி, ஜெயசுதா, வசந்தராஜா, ஜனனி, சங்கர் ஆகியோர் ஆவார்கள். மேற்படி நபர்களை probation officers ஆக நியமனம் செய்யப்ப்டார்கள். ஜெயசுதா என்பவர் இவ்வழக்கில் 5 வது அரசு தரப்பு சாட்சியாக சாட்சி பட்டியலில் காண்பிக்கப்பட்டுள்ளார். ஆனால் அவர் விசாரணை செய்யப்படவில்லை. நாகப்பட்டினத்தில் இந்த நிறுவனம் 015 முதல் 2018 ம் வரை இயங்கியது. இந்த நிதி நிறுவனம் எனக்கு ஆலோசனை கொடுக்கும். ஆலோசனை அடிப்படையில் ஊழியர்கள் canvassing க்கு செல்வார்கள். எனக்கு கிளை நிர்வாகம் செய்வது மட்டும் தான் வேலை. canvass செய்வது எனக்கு வேலை இல்லை. இவ்வழக்கில் காட்டப்பட்டுள்ள 2,3 எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த விதமான சம்பந்தமும் கிடையாது.

வாரத்தின் ஒவ்வொரு இறுதி நாட்களிலும் கோயம்புத்துாரில் இருந்து கலெக்ஷன் எடுத்து வந்து பணத்தை பெற்றுக் கொண்டு கோயம்புத்துாரில் உள்ள தலைமை அலுவலகத்திற்கு எடுத்து சென்றுவிடுவார்கள். 2016 ம் ஆண்டு நவம்பர் 8 ல் இந்தியாவில் demonetisation இந்தியா அரசால் செய்யப்பட்டது. இந்த பணமதிபிழப்பு செய்யப்பட்ட பிறகு தலைமை அலுவலகமானது எங்கள் நிதி நிறுவனத்தில் பணம் டெபாசிட் செய்த நபர்களுக்கு சரியான பணத்தொகை கொடுக்க முடியவில்லை, ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்காமல் அலைக்கழிக்கப்பட்டார்கள். கிளை நிர்வாக செலவுகளுக்கும் எந்தவித பண உதவிகளும் செய்யவில்லை. office வாடகைக்கும் பணம் ் கொடுக்கவில்லை. பணம் செலுத்ததாதற்கு தலைமை அலுவலகமானது demonetisation ஒரு காாரணம் என்று கூறினார்கள். இவ்வழக்கின் புகார்தாரராக இருக்கக்கூடிய ஆனந்தராஜ், அவரது மனைவி கலைமணி ஆகியோர்கள் எங்கள் நாகப்பட்டினம் நிறுவனத்தில் இருவரும் சேர்ந்து 2016 ம் ஆண்டு ரூ. 12,50,000 fixed deposit செய்தார்கள். மேற்படி ரூ. 12,50,000 ஐ வாரவார வரக்கூடிய கலெக்ஷன் ஏஜெண்ட் மூலம் தலைமை அலுவலகத்தில் கொடுத்து விட்டோம். நாங்கள் மேற்படி கூறிய ஆனந்தராஜ், அவரது மனைவி கலைமணி ஆகியோர்களுக்கு பாண்டு கொடுத்துள்ளோம். மேற்படி நபர்களை எனக்கு பணம் டெபாசிட் செய்யும் முன்பு எனக்கு தெரியாது. நான் அவர்களிம் டெபாசிட் செய்வதற்கு எந்தவிதமான canvass யும் செய்யவில்லை. இவ்வழக்கில் அரசு தரப்பில் கூறப்பட்ட சங்கதியான ஆனந்தராஜ் மற்றும் கலைமணி ஆகியோர்கள் நாகப்பட்டினத்தில் உள்ள ராமலிங்கம் சுவாமி

மடத்திற்கு சென்றதாகவும், அப்போதும் நான் மற்றும் 2,3 எதிரிகள் canvass செய்ததாக கூறிய சங்கதி முற்றிலும் தவறு ஆகும்.

Prompt Multi state Prompt coperative house building society limited ஆனது தமிழ்நாட்டிலும் மற்ற. மாநிலமான கேரளா, கர்நாடகா, ஆந்திராகவில் இயங்கி வருகிறது. இந்த நிறுவனமானது என்னுடைய சொந்த நிறுவனம் இல்லை. நான் யாரிடமும் எங்கள் நிறுவனத்தின் பண வைப்பீடு செய்ய வேண்டும் என்றும், நான் பொறுப்பாளராக இருப்பேன் என்று யாரிடமும் canvass செய்யவில்லை. demonetisation க்கு பின்பு நிறுவனம் சரியாக இயங்காததால் நான் கோயம்புத்தூர் தலைமை அலுவலகத்திற்கு சென்று பார்த்தேன். அங்கு விசாரித்த போது ஏற்கனவே கோயம்புத்தூர் குற்றவியல் நீதிமன்றத்தில் மேற்படி தலைமை அலுவலகத்திற்கு எதிராக வழக்கு தொடரப்பட்டு விசாரணை நடைபெறுகிறது என்பதை நான் அறிந்தேன். பின்பு நான் 24.08.2018 ம் அன்று நான் செலுத்திய caution deposit தொகையான ரூ. 3 லட்சத்தையும் மற்றும் எங்கள் நாகப்பட்டினம் நிறுவனத்தில் வாடிக்கயையாளர்கள் செலுத்திய முதலீட்டு தொகையும் செலுத்த வேண்டும் என்று கேட்டு தமிழ்நாடு முதல்வர் செல், தமிழ்நாடு காவல் துறை சென்னை அலுவலகம் , இணை ஆணையர் கோயம்புத்தூர் மற்றும நாகப்பட்டினம் காவல் துறை கண்காணிப்பாளருக்கும் எனது புகார் மனுவை தபால் மூலமாக அனுப்பினேன். தபால் அனுப்பியதற்கான புகார் கை நகல் **எதசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் அனுப்பிய மனுவானது முதல்வர் செல்லில் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை **எதசாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது** மற்றும் கோயம்புத்தூர் மாநகர காவல் அலுவலகத்தில் கொடுத்த பதில் ஆனது **எதசாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** Prompt Multi state Prompt coperative house building society limited ஆனது மத்திய அரசால் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் ஆகும். அது சம்**பந்தமான பதிவு சான்றிதழ் எதசாஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நாகப்பட்டினத்தில் உள்ள Prompt Multi state Prompt coperative house building society limited **கிளையின் அங்கீகார சான்றிதழ் எதசாஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கில் நிகழ்நிலை புகார்தாரர்களான ஆனந்தராஜ் மற்றும் கலைமணி ஆகியோர்கள் நாகப்பட்டினம் காவல் கண்காணிப்பாளருக்கு புகார் கொடுத்தார்கள். புகார் சம்பந்தமாக மாவட்ட குற்றப்பிரிவு (DCB) போலீசார் விசாரித்தார்கள். நான் வழக்கு

சம்பந்தமான அனைத்து விபரங்களையும் கூறினேன். எனக்கு ஏற்பட்ட அனைத்து பாதிப்புகளையும் கூறினேன். மேற்படி விபரங்களை காவல் ஆய்வாளர் முறையீட்டாளர்களிடம் எடுத்து கூறினார். இவ்வழக்கில் அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள வைப்பீடு நிதி பத்திரத்தில் (bond) பின்பக்கத்தில் முதலீட்டார்களின் தொகையானது பெறப்படவில்லை என்றால் கோயம்புத்தூரில் உள்ள சிவில் நீதிமன்றத்தில் தான் வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று 9 வது நிதிமுறையில் கூறப்பட்டுள்ளது. நான் நிதி நிறுவனத்தில் நியமிக்கப்பட்ட பணியாளர் ஆகும். 2,3 எதிரிகள் மேற்படி நிறுவனத்திற்கு எந்தவிதமான தொடர்பும் இல்லாதவர் ஆவார்கள். புகார் தாரர் நானும், 2,3 எதிரிகள் தான் மேற்படி நிறுவனத்திற்கு உரிமையாளர் என்று கூறுவது முற்றிலும் பொய் ஆகும். நானும, மற்ற வாடிக்கயைாளர் போல் ஏமாந்தவர் ஆவேன். புகார்தாரர்கள் நாகப்பட்டினம் மாவட்ட நீதிமன்றத்தில் என் மீதும் 2 ம் எதிரி மீதும் அசல் வழக்கு எண். 10/2021 தாக்கல் செய்திருந்தார்கள். அது தற்போது நிலுவையில் உள்ளது. இந்த வழக்கிற்கும் எனக்கும் 2,3 எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

அரசு தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்குச் எடுத்து சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.06.23 15:12:37 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
நாகப்பட்டினம்.